# பேரினவாத அடக்குமுறைகளுக்கு எதிராக மாபெரும் மனிதச் சங்கிலிப் போராட்டம்!





யாழ்ப்பாணம், ஒக். 04

பேரினவாத அடக்குமுறைகளுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் இன்று மாபெரும் மனிதச் சங்கிலிப் போராட்டமொன்று மருதனார் மடத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி யாழ் நகர் வரையில் முன்னெடுக்கப்பட்டது.

ஓ.. சிங்க வம்ச சரத்தே ஈழத்தின் பூர்வீகக்குடி தமிழரே, சரித்திரத்தைப் புரட்டிப்பார் புரியும் உன் வம்சம், கை வைக்காதே கை வைக்காதே நீதித்துறையின் மீது கை வைக்காதே, புத்த தர்மம் அகிம்சையா? காடைத்தனமா?, நீதியே நாட்டை விட்டு ஓடினால் இது நாடா சுடுகாடா? போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு ஏராளமானோர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டம் முன்னெடுக்கப்படும் பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது மக்கள் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூகத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

குறித்த போராட்டத்திற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைக் கழகம், தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் ஆதரவளித்ததுடன் பல பொது அமைப்புகளும் இணைந்திருந்தன. 2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 17 புதன்கிழமை 04.10.2023 கதிர் 85

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்



## நீதிச்சேவை ஆணைக்குழு விசாரணைகள் ஆரம்பம்!

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி ரீ.சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழு விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதற்காக விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் இலங்கை பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக நீதிச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 2 ➤

## 21 ஆண்டுகளின் பின்னர் இலங்கைக்குத் தங்கம்!




சீனாவில் நடைபெற்றுவரும் 2023 ஆம் ஆண்டுக்கான ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த தருஷி கருணாரத்ன தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

இவர் குறித்த தூரத்தை ஓடி முடிக்க 2.03.20 நிமிடங்களை எடுத்துக்கொண்டார்.

21 வருடங்களின் பின்னர் ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கைக்குக் கிடைத்திருக்கும் தங்கப் பதக்கம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சமையல் எரிவாயு விலைகள் அதிகரிப்பு

இன்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் உள்நாட்டு எரிவாயுவின் விலைகளை லிட்ரோ நிறுவனம் அதிகரித்துள்ளது.

அதன்படி 12.5 கிலோ எடை கொண்ட எரிவாயு சிலிண்டர் 343 ரூபா அதிகரிக்கப்பட்டு 2 ➤

## க.பொ.த. உயர்தரப் பரீட்சை புதிய திகதி வெளியானது!

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான மாற்றப்பட்ட புதிய திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய வரும் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை உயர் தரப் பரீட்சைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாற்று யோசனைகளைப் பரிசீலிக்க தயார் என்கிறார் ஜனாதிபதி ரணில்



நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான மாற்று யோசனைகளை பரிசீலிக்க தான் தயார் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, இதற்காக அனைத்து நாடாளுமன்ற 2 ➤

## சர்வதேச விசாரணை வேண்டாம் என்பதுதான் தனது கருத்தும் என்கிறார் மஹிந்த ராஜபக்ச

சர்வதேச விசாரணை வேண்டாம், என்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கருத்துடன் தானும் உடன்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இன்று இடம்பெற்ற மத வழிபாட்டு நிகழ்வை அடுத்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு 2 ➤



## நான் கூறியது எப்படி அச்சுறுத்தலாகும்? நாடாளுமன்றில் சரத்வீரசேகர கேள்வி!



முல்லைத்தீவு நீதிபதிக்கு நான் அச்சுறுத்தல் விடுத்திருந்தால், என்னை அந்த நேரத்திலேயே கைது செய்திருக்கலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பாக நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

இரண்டாயிரம் வருடங்கள் பழைமையான எமது பௌத்த புராதானச் சின்னத்தில், பொங்கல் வைத்து வழிபட்ட நீதிமன்றம் அனுமதி அளித்தது. அப்போது முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன், முல்லைத்தீவு நீதிபதியுடன் பேசிய காரணத்தினால், நானும் எனது கருத்துக்களை முன்வைக்க நீதிபதியிடம் அனுமதி கேட்டிருந்தேன்.

எனினும், எனக்கு அனுமதி மறுக்கப்பட்டது. நான் முன்னாள் இராணுவ அதிகாரி என்பதாலும், எனக்குச் சட்டங்கள் தெரியும் என்பதாலும், நீதிபதியொருவர் கருத்து வெளியிட மறுத்தமையால், நானும் அமைதியாகிவிட்டேன். நாடாளுமன்றிலும், குருந்தூர்மலையில் பொங்கல் நிகழ்வை நடத்த அனுமதியளித்தமை தவறு என்றும் இது இந்து - பௌத்த மக்களிடையே தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்றுதான் 2 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# எழுதுதல், வாசித்தல் திறன் குறைந்தவர்களுக்கான மோட்டார் வாகனச் சாரதி வாய்மொழிப் பரீட்சை

கிளிநொச்சி மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பிரிவில் எழுதுதல், வாசித்தல் திறன் குறைந்தவர்களுக்கான வாய்மொழிப் பரீட்சையினை எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடாத்துவதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி காரணங்களின் நிமித்தம் இதுவரை சாரதி அனுமதிப்பத்திரம் பெறத்தவறியவர்கள் இச்சந்தர்ப்பத்தைத் தவறவிடாது பயன்படுத்திக்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பிரிவின் பிரதம மோட்டார் வாகன பரிசோதகர் ஜி.எச்.டி.கே. விஜயசேகர அறிவித்துள்ளார்.

மேலும், பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன் ஏ9 வீதி, கிளிநொச்சி பழைய கச்சேரி வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பிரிவின் மாவட்டக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்வதுடன், மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார். (02)

## புகையிரத ஒழுங்குமுறை அதிகாரிகள் இன்று தொழிற்சங்க நடவடிக்கை

புகையிரத ஒழுங்குமுறை அதிகாரிகள் சங்கம் இன்று தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மாளிகாவத்தை புகையிரத தளத்தில் பிரதிக் கட்டுப்பாட்டாளர் ஒருவருக்கும் புகையிரதப் பாதுகாப்புச் சேவை அதிகாரி ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலே இந்த பணிப்பகிஷ்கரிப்புக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் பல ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

## புலமைப்பரிசில் பரீட்சை - திணைக்களம் அறிவிப்பு!

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள நிலையில், பரீட்சைகள் திணைக்களம் முக்கிய அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளது.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான கருத்தரங்குகள், மேலதிக வகுப்புகள் மற்றும் செயலமர்வுகள் எதிர்வரும் 11ஆம் திகதி நள்ளிரவு முதல் பரீட்சை நிறைவடையும் வரை தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடையை மீறிச் செயற்படுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 2,888 பரீட்சை மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகள் எதிர்வரும் வாரத்தில் தளர்த்தப்படும்

இலங்கையில், வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகள் பல எதிர்வரும் வாரத்தில் தளர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

முந்நூற்று நான்கு எச் எஸ் குறியீடுகளைத் தவிர, மற்ற வாகனக் கட்டுப்பாடுகள் இவ்வாறு நீக்கப்படும் எனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், அரசாங்கம் ஆரம்பத்தில் எடுத்த முடிவை மாற்றியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (க)

## கிளிநொச்சியிலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியிருந்தேன். இதனை நான் இன்றும் கூறுவேன். இது எப்படி அச்சுறுத்தலாகும்?

அந்தச் சம்பவத்திற்குப் பின்னர் நான் குறித்த நீதிபதியைச் சந்திக்கக்கூட இல்லை. முல்லைத்தீவு, நீதிபதிக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் 5 வழக்குகள் உள்ளன. இந்த வழக்குகள் தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழு ஊடாக தனக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சட்டமா அதிபரிடம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். இந்த நிலையில், அவரது தீர்ப்பை மாற்றுமாறு ஒருபோதும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை, என சட்டமா அதிபர் திணைக்களம் தற்போது தெரிவித்துள்ளது.

அப்படி அழுத்தம் பிரயோகிக்கப்பட்டிருந்தால், அவர் இது தொடர்பாக பிடியாணையொன்றைப் பிறப்பித்திருக்கவும் முடியும்.

அவர் வெளிநாடு செல்வதற்கு ஒருவாரத்திற்கு முன்பாக அவரது வாகனத்தை விற்பனை செய்து, வெளிநாட்டுத் தூதுவர்கள் இருவரை அவர் சந்தித்துள்ளார். பொலிஸ் பாதுகாப்பும் அவருக்குக் குறைக்கப்படவில்லை என பொலிஸ் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அவரது மனைவியோ, இவரால் தனக்குத் தொடர்ந்தும் பிரச்சினைகள் ஏற்படுத்தப்படுவதாக நீதிச்சேவை ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றையே அளித்துள்ளார்.

முல்லைத்தீவு பொலிஸிலும், இதுதொடர்பாக அவரது மனைவி முறைப்பாடு செய்துள்ளார். இதில், குறித்த நீதிபதி மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும் மனநல வைத்தியர்கள், இவருக்கு வைத்தியம் பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தனக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக நீதிபதி கூறுவாராயின், அது யாரால் என்பதை அவர் வெளிப்படையாகக் கூறவேண்டும். ஜனாதிபதி, பொலிஸ் அமைச்சர் உள்ளிட்டோர், இந்த விடயம் தொடர்பாக விசாரணை செய்யக் குழுக்களை நியமித்துள்ளனர்.

இந்தக் குழுக்கள் உடனடியாக இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைச் செய்து, உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் என்று நாமும் கேட்டுக்கொள்கிறோம், என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார். (04)

## சர்வதேச விசாரணை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளிக்கும் போதே மஹிந்த ராஜபக்ச இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தமக்கு மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் எண்ணம் இல்லை என்றும் புதிய தலைமைத்துவத்தின் கீழ் கட்சி முன்னோக்கி செல்ல வேண்டும் என்றும் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

## மாற்று யோசனைகளைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களுடனும் இணைந்து செயற்படத் தயார் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த இக்கட்டான தருணத்தில் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

தங்கள் பிரச்சினைகளுக்கான தீர்வை நாடாளுமன்றத்தின் ஊடாக பொதுமக்கள் எதிர்பார்க்கும் இந்தத் தருணத்தில், பொதுவான கட்டமைப்பின் கீழ் அனைவரும் பணியாற்ற வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## சமையல் எரிவாயு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய விலை 3,470 ரூபாவாகவும், 5 கிலோ எடை கொண்ட எரிவாயு சிலிண்டர் 137 ரூபா அதிகரிக்கப்பட்டு புதிய விலை 1,393 ரூபாவாகவும், 2.3 கிலோ எடைகொண்ட எரிவாயு சிலிண்டர் 63 ரூபாவால் அதிகரித்து புதிய விலை 650 ரூபாவாகவும் உயர்த்தப்பட்டுள்ளன. இதேவேளை, லாப்ஸ் நிறுவனமும் விலைத் திருத் தத்தை அறிவித்துள்ளது.

அதன்படி 12.5 கிலோ எடை கொண்ட எரிவாயுவின் விலை 150 ரூபா அதிகரிக்கப்பட்டு புதிய விலை 3,985 ரூபாவாகவும், 5 கிலோ எடைகொண்ட எரிவாயுவின் விலை 60 ரூபா அதிகரிக்கப்பட்டு புதிய விலை 1,595 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. (04)

## நீதிச்சேவை ஆணைக்குழு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிபதி ரீ.சரவணராஜாவின் பதவி விலகலுக்கான காரணங்கள் மற்றும் அதற்குப் பொறுப்பானவர்கள் தொடர்பில் ஆராய்ந்து நீதிமன்றச் செயல்பாடுகளுக்கு ஏற்பட்டுள்ள தடைகளைக் களைவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் நீதிச் சேவை ஆணைக்குழு பிரதம நீதியரசரிடம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கோரிக்கை விடுத்துள்ளது.

கொக்குத்தொடுவாயில் மனிதப் புதைகுழி தொடர்பிலான வழக்கில் உத்தரவுகளைப் பிறப்பித்திருந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜா, தமது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால் தாம் வகித்த அனைத்து நீதிச்சேவைப் பணிகளில் இருந்தும் பதவி விலகுவதாக நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்ததுடன், அவர் நாட்டைவிட்டும் வெளியேறியிருந்தார். (க)

## பேரினவாத அடக்குமுறைகளுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப்போராட்டத்தில் மாபெரும் மனிதச் சங்கிலியாகக் கைகோர்த்து, நீதி கோரிட திரண்டு வர வேண்டுமென தமிழ்தேசிய அரசியல் கட்சிகள் நேற்றைய தினம் துண்டுப்பிரசுரங்களை வழங்கி அழைப்பு விடுத்திருந்தன.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவி விலகி வெளிநாட்டிற்குச் சென்றுள்ள நிலையில் நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும், நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் தமிழ் நீதிபதிகளின் தீர்ப்புக்கள் விமர்சனத்திற்குள்ளாவதை, உரிய அமைச்சுக்களும் அமைச்சர்களும் ஜனாதிபதியும் தலையிட்டு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரியே குறித்த மனிதச் சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# கிழக்கு மாகாண மெய்வல்லுநர் போட்டிகளில் சாதனை படைத்த அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவருக்கு பாராட்டு

(எம்.ஏ.றமீஸ்)

கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகளின்போது வெற்றி பெற்றுச் சாதனை படைத்த அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது சாதனை மாணவர்கள் வீதி வழியாக மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு பாண்ட் வாத்திய இசை வழங்கி, ஊர்வலமாய் அழைத்துச் செல்லப்பட்டனர்.

மாகாண மட்டத்தில் திறமை காட்டி சாதனை படைத்த மாணவர்கள், மாணவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோர் இதன்போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வின்போது, அக்கரைப்பற்று கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.ஜெமீல், ஆசிரிய ஆலோசகர் எம்.எச்.ஹம்மாத், பிரதி அதிபர்களான எம். இக்பால், எஸ்.எம்.எம்.ஜாபீர், உதவி அதிபர்களான ஏ.எல்.சம்சுல் பழீல், எம்.ஏ.நபீல் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகளின்போது அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாகாண மட்டத்தில் புதிதாக நான்கு போட்டிச் சாதனைகளை நிலை நாட்டியது.



அத்தோடு, கிழக்கு மாகாண மட்டத்தில் மொத்தப் புள்ளிப் பட்டியலில் ஆண்கள் பிரிவில் இரண்டாவது பாடசாலையாகவும் அஞ்சலோட்டப் போட்டிப் பிரிவில் மாகாண மட்டத்தில் மூன்றாவது பாடசாலையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இருபது வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான சிறந்த மெய்வல்லுநராக இப்பாடசாலையின் கே.அஹமட் நுஸ்பான் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இம்மாணவர் 100 மீற்றர் ஓட்டப் போட்டியின்போது குறித்த தூரத்தினை 11.10 செக்கன்களில் ஓடி முடித்து மாகாண மட்டத்தில் புதிய சாதனையைப் படைத்துள்ளார்.

இம்மாணவர் 200 மீற்றர் ஓட்டப் போட்டியின்போது குறித்த தூரத்தினை 22.49 செக்கன்களில் ஓடி மற்றொரு புதிய மாகாண சாதனையினையும் நிலை நாட்டியுள்ளார்.

## தேசிய விருது பெற்ற சம்மாந்துறை வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்குக் கௌரவிப்பு



(நூருல் ஹுதா உமர்)

உலக நோயாளர் பாதுகாப்புத் தினத்தையொட்டி சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

வைத்திய அத்தியட்சகர் எம்.எச். எம்.ஆஸாத் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் பிரதம அதிதியாகவும், பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பீ.அப்துல் வாஜித் கௌரவ அதிதியாகவும், திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர் விசேட அதிதியாகவும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் விசேட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் என பலரும் இணைந்திருந்தனர்.

சுகாதார அமைச்சினால் நடாத்தப்பட்ட தேசிய கண்காணிப்புச் செயல்முறையின் கீழ் நிறுவனங்களிடையே மேற்கொள்ளப்பட்ட சிறந்த செயல் திறனுக்கான தேசிய மதிப்பியலில், வெளி நோயாளர் பிரிவினைச் சிறப்பாக முகாமைத்துவம் செய்த சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை முதலாம் இடத்தினை வகித்து, அண்மையில் தேசிய விருதினைப் பெற்றுக் கொண்டது.

குறித்த விருதினைப் பெறுவதற்காக அர்ப்பணிப்புடன் உழைத்த வைத்தியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் எனப் பலரும் இந்நிகழ்வின்போது பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.




## தங்கம் வென்ற சாதனை மாணவன் சஜாத்துக்கு சம்மாந்துறையில் ஊர்வலத்தோடு வரவேற்பு!

(காரைதீவுச் செய்தியாளர்)

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் நடத்திய விளையாட்டுப் போட்டிகளில், ஈட்டி எறிதல் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றுத் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்த சம்மாந்துறை அல் முனீர் வித்தியாலய மாணவன் யூ.எல். எம். சஜாத்துக்கு இன்று ஊர்வலத்துடன் கூடிய பெரு வரவேற்பளிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் ஏ.அப்துல் ஜப்பார் தலைமையில் இடம்பெற்ற ஊர்வலம், சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையை வந்தடைந்தது. அங்கு வலயக்கல்விப் பணிப்பாளர் டொக்டர் உமர் மௌலானா சாதனை மாணவன் சஜாத்துக்கு மலர் மாலை சூட்டி தங்கப்பதக்கம் அணிவித்து வரவேற்றார் .

நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி நிதர்ஷினி மகேந்திரகுமார், யாஸீன் அரபாத் மொகைதீன், உதவிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ. நசீர் (உடற்கல்வி ), வி.ரி. சகாதேவ ராஜா ஆகியோரும் இணைந்துகொண்டனர்.

16 வயதுக்குட்பட்ட ஈட்டியெறிதல் போட்டியில் 44 .14 மீற்றர் தூரத்திற்கு எறிந்து முதலிடம் பெற்று சஜாத் தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# நைஜீரியாவில் சட்டவிரோத சுத்திகரிப்பு ஆலை வெடிவிபத்தில் 15 பேர் உயிரிழப்பு



மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் நைஜர் டெல்டா பகுதியில் சட்டவிரோதமாக இயங்கி வந்த கச்சா எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த திங்களட்கிழமை ஏற்பட்ட இந்த வெடி விபத்தில் ஏராளமான உடல்கள் முழுவதும் எரிந்து விட்டதாலும், காயமடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாலும் விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. (04)



# சூடான் உள்நாட்டு மோதலால் 54 லட்சம் பேர் புலம்பெயர்வு

சூடானில் இராணுவத்துக்கும், துணை இராணுவப் படைக்கும் இடையே அண்மைக் காலமாக நடந்து வரும் மோதல் காரணமாக 54 லட்சம் பேர் புலம் பெயர்ந்து தவித்து வருவதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இது குறித்து ஐ.நா.வின் சர்வதேச அகதிகள் நலப் பிரிவு வெளியிட்டுள்ள தகவலில், சூடானில் இராணு வத்துக்கும், ஆர்எஸ்எஃப் துணை ராணுவப் படைக் கும் இடையே கடந்த மூன்றரை மாதங்களுக்கு மேல் நடைபெற்று மோதல் காரணமாக, 54 லட்சம் பேர் தங்களது இருப்பிடங்களைவிட்டு வெளியேறி தவித்து வருகின்றனர்.

புலம் பெயர்ந்தவர்களில் 43 லட்சத்துக்கும் மேற் பட்டவர்கள் உள்நாட்டிலேயே அகதிகளாக உள்ளனர். 11 லட்சம் பேர் சர்வதேச அகதிகளாகியுள்ளனர். அவர்கள், அண்டை நாடுகளான எகிப்து, சாட் போன்ற நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு ஆபிரிக்க நாடான சூடானில் அப்தெல் ஃ பட்டா அல்-புர்ஹான் தலைமையிலான ராணுவத்துக் கும், முகமட் ஹம்தான் டகாலோ தலைமையிலான ஆர்எஸ்எஃப் துணை ராணுவப் படைக்கும் இடையே அதிகாரப் போட்டி காரணமாக கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் சண்டை நடந்து வருகிறது. இதில், இது வரை நான்காயிரத்திலிருந்து பத்தாயிரம் பேர்வரை உயிரிழந்திருப்பதாகக் கூறப்படுகிறது. (04)

# தாய்லாந்தில் சிறுவன் துப்பாக்கிச் சூடு மூவர் உயிரிழப்பு - ஆறு பேர் காயம்

தாய்லாந்திலுள்ள வணிக வளாகம் ஒன்றில் 14 வயதுச் சிறுவன் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

தலைநகர் பாங்கொக்கில் உள்ள முக்கிய வணிக வளாகமொன்றுக்கு வந்த 14 வயதுச் சிறுவன் அங்கி ருந்தவர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிச்சூடு நடத்தி யுள்ளான். இதில் 3 பேர் உயிரிழந்து, 6 பேர் காய மடைந்தனர். தாக்குதல் நடத்திய சிறுவனைப் பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

தாக்குதலுக்கான நோக்கம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

தாய்லாந்தில் துப்பாக்கி சார்ந்த குற்றங்கள் அடிக்கடி நடைபெற்றாலும், பொது இடங்களில் துப்பாக்கிச்சூடு நடைபெறுவது மிகவும் அபூர்வமாகும். அங்கு கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் மழலையர் காப்பகத்தில் நடை



பெற்ற துப்பாக்கி மற்றும் கத்தித் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 36 பேர் உயிரிழந்திருந்தனர். அதற்கு முன்னர் கடந்த 2020 இல் வணிக வளாகத்துக்குள் ராணுவ வீரன் ஒருவன் நடத்திய சரமாரியான துப்பாக்கிச்சூட்டில் 29 பேர் கொல்லப்பட்டனர். (04)

# ரஷ்யாவின் எதிர்ப்பையும் மீறி சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் இணைய முடிவெடுத்தது ஆர்மீனியா



சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ஆர்மீனியா இணைவதற்கான தீர்மானத்தை அந்த நாட்டு நீதிமன் றம் நேற்று நிறைவேற்றியது. தனது நெருங்கிய கூட்டா ளியான ரஷ்யாவின் எதிர்ப்பையும் மீறி ஆர்மீனியா இந்த முடிவை எடுத்துள்ளது.

நெதர்லாந்தின் த ஹேக் நகரில் அமைந்துள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இணைவதற் கான தீர்மானத்தின் மீது ஆர்மீனிய நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது. இதில், தீர்மானத்துக்கு ஆதரவாக 60 வாக்குகளும் எதிராக 22 வாக்குகளும் பதிவாகின. அதையடுத்து, அந்தத் தீர்மானம் நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்ட 60 நாள்களுக்குள் அதில் அதிபர் வாஹகன் கச்சாட்ரியன் கையொப்பமிட வேண்டும். அதில் அவர் கையொப்பமிட்டால் தீர்மானம் அமுலுக்கு வரும்.

சோவியத் யூனியனின் முன்னாள் உறுப்பு நாடுக ளான ஆர்மீனியாவுக்கும், அசர்பைஜானுக்கும் இடை யில் அமைந்துள்ள நகோர்னோ - கராபக் பிராந்தியம் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாக மோதல் நீடித்து வருகிறது. ஆர்மீனியப் பழங் குடியினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட அந்தப் பிராந்தியத்தை அசர்பைஜானின் ஓர் அங்கமாக சர்வதேச நாடுகள் அங்கீகரித்தன. இருந்தாலும், கடந்த 1994 ஆம் ஆண்டுப் போருக்குப் பிறகு ஆர்மீனியப் படையினரின் ஆதரவுடன் அந்தப் பகுதியை பிரி வினைவாதிகள் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அதன் பிறகு அந்தப் பிராந்தியத்தில் ஆர்மீனியாவும், அசர்பைஜானும் அவ்வப்போது மோதலில் ஈடுபட்டு வந் தன. அந்த மோதலில் ஆர்மீனியாவுக்கு ரஷ்யாவும், அசர்பைஜானுக்கு துருக்கியும் ஆதரவளித்து வந்ததா கக் கூறப்படுகிறது. எனினும், நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் படையெடுத்த பிறகு, ஆர்மீனிய நிலைவரம் குறித்த ரஷ்யாவின் கவனம் குறைந்ததாகக் கூறப்படுகிறது.

இதனைப் பயன்படுத்தி, நகோர்னோ-கராபக் பிராந் தியத்தில் அசர்பைஜான் கடந்த செப்டெம்பர் 19 ஆம் அதிரடி தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டது. அதனை சமாளிக்க முடியாத ஆர்மீனிய பிரிவினைவா தப் படையினர் யுத்த நிறுத்தம் மேற்கொண்டு, தங்கள் ஆயுதங்களை அசர்பைஜான் படையினரிடம் ஒப்படைக்க ஒப்புக் கொண்டனர். அதையடுத்து, நகோர்னோ-கரா பக் பிராந்தியம் மீண்டும் தங்களது கட்டுப்பாட்டுக்கு வந்துவிட்டதாக அசர்பைஜான் அறிவித்தது.

பின்னர், கடந்த சுமார் 30 ஆண்டுகளாக அந் தப் பிராந்தியத்தின் ஆட்சியமைப்பாக இருந்து வந்த நகோர்னோ-கராபக் குடியரசை வரும் ஜனவரி முத லாம் திகதி கலைக்கவிருப்பதாக அதன் அதிபர் சாம்வெல் ஷாராமானயன் அறிவித்தார்.

இந்த நிலையில், அசர்பைஜான் அரசால் துன்புறுத் தப்படலாம் என்ற அச்சத்தின் பேரில், அந்தப் பிராந்தியத் திலிருந்து ஏறத்தாழ அனைத்து ஆர்மீனியப் பழங்குடி யினரும் வெளியேறி ஆர்மீனியாவில் தஞ்சமடைந் துள்ளனர்.

இந்த நிலையில், நகோர்னோ-கராபக் விவகாரத்தில் அசர்பைஜானின் போர்க் குற்றங்களைத் தடுத்து நிறுத் தும் நோக்கில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இணையும் முடிவை ஆர்மீனியா எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது. எனினும், உக்ரைன் போர் விவகாரத்தில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கைது உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில், ஆர்மீனியா அந்த நீதிமன்றத்தில் இணைவது நட்பு விரோதச் செயல் என்று ரஷ்யா எதிர்ப்புத் தெரி வித்து வருகிறது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை உருவாக்கு வதற்கான ஒப்பந்த ஆவணத்தில் கையொப்பமிடும் நாடுகள், நீதிமன்றத்தால் கைது உத்தரவு பிறப்பிக்கப் பட்ட யார் தங்கள் நாட்டுக்கு வந்தாலும் அவரைக் கைது செய்து நீதிமன்றத்திடம் ஒப்படைக்கவேண்டும்.

ஏற்கெனவே, தென்னாபிரிக்காவில் கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டில் பிரதமர் நரேந் திர மோடி உள்ளிட்ட உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர். ஆனால், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத் தின் உறுப்பு நாடான தென்னாபிரிக்காவுக்கு அதிபர் புடின் வந்தால், நீதிமன்ற உத்தரவின்படி அவர் கைது செய்யப்படலாம் என்ற அச்சம் நிலவியது.

அதையடுத்து, அந்த மாநாட்டில் பங்கேற்பதை புடின் தவிர்க்க வேண்டியிருந்தது. இந்தச் சூழலில், ஆர்மீனியாவும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இணைவது அந்த நாட்டுக்கும், ரஷ்யாவுக்கும் இடையி லான உறவில் பின்னடைவை ஏற்படுத்தக் கூடும் என்று கூறப்படுகிறது.

இருந்தாலும், இந்த முடிவு அசர்பைஜானுடனான பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டதுதான் எனவும், ரஷ்ய அதிபர் புடினுக்கு எதிரான சர்வேதசக் குற்றவியல் நீதிமன்றத்தின் கைது உத்தரவுக்கும் இதற் கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் ஆர்மீனியா விளக்கமளித்துள்ளது. (04)

# ஒரே நாளில் ரஷ்யாவின் 29 ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியதாக உக்ரைன் அறிவிப்பு

ஒரே நாளில் ரஷ்யாவின் 29 ட்ரோன்கள் சுட்டு வீழ்த் தப்பட்டுள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. இந்த ட்ரோன்கள் ஈரானின் தாக்குதல் பிரிவைச் சேர்ந்தவை எனவும் உக்ரைன் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

உக்ரைனின் ஆற்றல் தொடர்பான உள்கட்டமைப் புகளின் மீது ரஷ்யா தனது தாக்குதலை மீண்டும் தொடங்கியுள்ளது. ஆற்றல் உள்கட்டமைப்புகளின் மீதான தாக்குதல்களால் உக்ரைன் கடந்த ஆண்டு பெருமளவில் பாதிக்கப்பட்டது.

ரஷ்ய ஆக்கிரமிப்பாளர்கள் உக்ரைன் மீது 31 ஆளில்லா விமானங்களைக் கொண்டும், இஷ்கந்-தர்-கே வகை ஏவுகணைகளைக் கொண்டும் தாக்கினர். ஆயினும், நாங்கள் 29 ட்ரோன்களை சுட்டு வீழ்த்தி விட்டோம் என இது தொடர்பாக உக்ரைன் விமானப் படைத் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ரஷ்யா மீதான தடைகளை அதிகப்படுத்துமாறு உக் ரைன் அதிபர் ஐரோப்பிய ஒன்றியத்திடம் அண்மையில் வலியுறுத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (04)

# மாகாணத் தமிழ் மொழித் தினப் போட்டிகளில் கல்முனை வலயத்திற்கு 20 இடங்கள் கிடைத்தன

## 6 போட்டிகள் தேசிய மட்டத்திற்கும் தெரிவு

(நூருல் ஹுதா உமர்)

அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டிகளில் எழுத்தாக்கம் மற்றும் அரங்கப் போட்டிகளில் கல்முனைக் கல்வி வலயத்திலிருந்து ஆறு பிரிவுகளில் போட்டியிட்டவர்கள் தேசியமட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 20 போட்டிகளுக்கு மாகாணத்தில் முதல் மூன்று இடங்கள் கிடைத்துள்ளதாகவும் மாகாணத் தமிழ் மொழிப் பிரிவு அறிவித்துள்ளது.

**முதலாம் இடங்களைப் பெற்றவர்கள் விபரம் -**

கட்டுரை- பிரிவு-3, அல்-அஸ்றக் மத்திய மகா வித்தியாலம், எம்.எச்.பாத்திமா ஹப்னா

சிறுகதை ஆக்கம்- பிரிவு-4, ,ராம கிருஷ்ண மிஷன் பெண்கள் வித்தியாலயம், ஆர்.மகோற்சபி

ஆக்கத்திறன் வெளிப்பாடு- பிரிவு-1, அஸ்-ஸபா வித்தியாலயம், எஸ்.எச்.அம்மார்

பேச்சு - பிரிவு-4, அல்-ஹம்றா மகா வித்தியாலயம், அப்துல் சமட் ஹயானி

பாவோதல்- பிரிவு-4, கார்மேல் பற்றிமா கல்லூரி, யு.அபர்ணசுவேர்தா

முஸ்லிம் நிகழ்ச்சி - அல்-அஷ்ரக் மத்திய மகா வித்தியாலயம்

**இரண்டாம் இடங்களைப் பெற்றோர் விபரம் -**

குறுநாடக ஆக்கம் - என்.எம்.வா,ல் அர்ஹப், பிரிவு -4, ஸாஹிறா கல்லூரி-கல்முனை

கவிதை - பிரிவு-4, எம்.பி.எம்.ஆதிப், ஸாஹிறா கல்லூரி.

தமிழறிவு வினா விடை - அல்-அஸ்றக் ம.ம.வி, நிந்தவூர்

பாவோதல் - பிரிவு-3, அ.தேஷ்மி, கார்மேல் பற்றிமா கல்லூரி

இசை - தனி - பிரிவு-2, க.வேகாத்மி, ,.கி.மி பெண்கள் வித்தியாலயம்

நடனம்-குழு 1, கார்மேல் பற்றிமா கல்லூரி

வில்லுப்பாட்டு - கார்மேல் பற்றிமா கல்லூரி

**மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களது விபரம் -**

திறனாய்வு - பிரிவு -5, எம்.ஜெ.பாத்திமா அமானா, அல்-பஹ்றியா ம.வி-கல்முனை

பாவோதல் - பிரிவு-1, ஏ.எச்.ஹனீப் முகம்மட், அஸ்-ஸபா வித்தியாலயம்

இசை - குழு 1 - இ.கி.மி. பெண்கள் வித்தியாலயம்

நடனம் - தனி - பிரிவு-3, சு.அகஸ்ரி, கார்மேல் பற்றிமா கல்லூரி

நாட்டிய நாடகம் - இ.அசேதா, கார்மேல் பற்றிமா கல்லூரி

தமிழறிவு வினாவிடை - அல்-அஷ்ரக் மத்திய மகா வித்தியாலயம்

சிந்து நடைக்கூத்து - காரைதீவு சண்முகா மகா வித்தியாலயம்

ஒக்டோபர் 28, 29 மற்றும் நவம்பர் 4, 5 ஆம் திகதிகளில் தேசிய மட்டப் போட்டிகள் கொழும்பில் நடைபெறவுள்ளன.

# ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள்



(கே.எ.ஹமீட்)

'சிறுவர்களுக்கு ,ரக்கம் காட்டாதவர்களும் பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தாதவரும் நம்மை சார்ந்தவர் அல்லர்' என்ற நபிமொழியின் தொனிப்பொருளில் சர்வதேச சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் ஏறாவூரில் சிறப்பாக நடைபெற்றன.

ஏறாவூர் சமூகநலன் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவரும் மட்டக்களப்பு மத்தி உதவிக் கல்விப்பணிப்பாளருமான ஏ.எம்.முபாஸ்தீன் தலைமையில் ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது வைத்தியசாலையின் மருத்துவ நலன் தேவை கருதி ஒரு தொகுதி மருந்துப்பொருட்கள், விடுதிகளுக்குச் சுவர்க் கடிகாரங்கள் மற்றும் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் சிறுவர்கள் மற்றும் முதியோர்களுக்கான அன்பளிப்புப் பொருட்கள் என்பன சமூக நலன் அபிவிருத்தி ஒன்றியத்தின் உறுப்பினர்களால் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில், ஆதார வைத்தியசாலை வைத்தியர்களான ஏ.எல்.எவ்.பஜீரியா, எஸ்.எம்.பிர்ணாஸ், ஆகியோர்களுடன் சமூக நலன் அபிவிருத்தி ஒன்றியத்தின் உப தலைவர் ஐ.எம்.தசீர்,

செயலாளர் ஏ.ஆர்.எம்.வசீம் அக்ரம் மற்றும் விசேட ஆலோசகர் அல்ஹாஜ் ஐ.எம்.ஜெமில் மற்றும் பாறூக் மௌலவி உட்பட ஒன்றிய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.




# வெல்லாவெளி கலைமகளில் சர்வதேச சிறுவர் – முதியோர் தின நிகழ்வுகள்

(வி.ரி.சகாதேவராஜா)

வெல்லாவெளி கலைமகள் வித்தியாலய சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வுகள் இன்று அதிபர் ஆறுமுகம் புட்கரன் தலைமையில் நடைபெற்றன.

பிரதம அதிதியாக பாடசாலையின் இ.பி.எஸ்.ஐ. இணைப்பாளரும் கோட்டக் கல்விப் பணிப்பாளருமான த.அருள்ராஜாவும், கௌரவ அதிதியாக வெல்லாவெளி இலங்கை வங்கி முகாமையாளர் திருமதி ப. ரமேஷ்கரனும், சிறப்பு அதிதியாக போரதீவுப் பற்று சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் அ. நவநிதியும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் உரைகளும் இடம்பெற்றன. முதியோர்கள் பாடசாலை ஆசிரியர்களால் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அனைத்து மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

வரவேற்புரையை பிரதி அதிபர் க.இராமகிருஷ்ணன் நிகழ்த்த, ஆசிரியை திருமதி யோ.கந்தசாமி நன்றியுரை வழங்கினார்.





# ஷி யான் 6 சீன ஆய்வுக் கப்பலுடனான ஆய்வில் இருந்து ‘றுகுணு’ பல்கலைக்கழகம் விலகுவதாக அறிவித்தது!




சீனப் புவி இயற்பியல் அறிவியல் ஆய்வுக் கப்பலான ஷி யான் 6 என்ற கப்பலுடன் இணைந்து மேற்கொள்ளப்படவிருந்த ஆய்வுத் திட்டத்தில் இருந்து விலக முடிவு செய்துள்ளதாக 'றுகுணு' பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

சீனக் கப்பலின் வருகை குறித்து அண்டை நாடான இந்தியா அதிருப்தியடைந்துள்ள நிலையிலேயே இந்த முடிவை குறித்த பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

ஷி யான் 6 கப்பல் ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி இலங்கையில் நங்கூரமிடுவதாக இலங்கை கடற்படையினர் முன்னர் உறுதிப்படுத்தியிருந்த போதிலும், இதுவரையில் இலங்கை அதிகாரிகளால் இராஜதந்திர மட்டத்தில் அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

சீனப் புவி இயற்பியல் அறிவியல் ஆய்வுக் கப்பலான ஷி யான் 6 நேற்று மாலை ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து சுமார் 474 கடல் மைல் தொலைவில் நிலைநிறுத்தப்பட்டது.

வெளிவிவகார அமைச்சின் கூற்றுப்படி, ஷி யான் 6 கப்பல் இலங்கையின் எந்தவொரு துறைமுகத்திலும் நிறுத்துவதற்கு இராஜதந்திர மட்ட அனுமதி வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஷி யான் 6 ஆய்வுக் கப்பல் என்பதால், அது தமது ஆராய்ச்சியை மேற்கொள்ள விரும்பும் திகதிகள் மற்றும் பகுதிகளை நாட்டின் வெளியுறவு அமைச்சிற்கு தெரிவிக்க வேண்டும் என்று வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

றுகுணு பல்கலைக்கழகத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில், சீன புவி இயற்பியல் விஞ்ஞான ஆராய்ச்சிக் கப்பலான ஷி யான் 6 இலங்கையை வந்தடையும் என 'நாரா' என்ற தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் முன்னதாக தெரிவித்திருந்தது.

எவ்வாறாயினும், ஷி யான் 6 உடன் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இணங்கிய, பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்திய இரண்டு பல்கலைக்கழக விரிவுரையாளர்களில் ஒருவர் வெளிநாட்டுக்குப் புலம்பெயர்ந்துள்ளதாகவும், மற்றைய விரிவுரையாளர் நாட்டின் பல்கலைக்கழக அமைப்பிலிருந்து முற்றாக விலகிவிட்டதாகவும் றுகுணு பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. (க)

# பிரான்சில் அரசியல் படுகொலை செய்யப்பட்ட நடராஜா மதீந்திரனினுக்கு நீதி கோரி கடிதம்

பிரான்சில் அரசியல் படுகொலை செய்யப்பட்ட பிரான்ஸ் தமிழர்களின் பிரதிநிதி நடராஜா மதீந்திரனின்படுகொலைக்கு நீதி வேண்டும் என பிரான்சு உள்துறை அமைச்சுக்கும், நீதி அமைச்சுக்கும் பிரான்ஸ் தமிழ் பண்பாட்டுவலையம் கடிதம் மூலம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

பிரான்ஸில் ஈழத் தமிழ் மக்களின் தலைவராகவிருந்த திரு.நடராஜா மதிந்திரன் (பரிதி) அவர்களின்படுகொலைக்கு நீதி கிடைக்கவும், அவரது படுகொலை வழக்கை பிரான்ஸ் அரசு மீண்டும் விசாரிக்கவும் கோரிக்கையை பிரான்ஸ் வாழ் தமிழ் மக்கள் சார்பாக தமிழ் பண்பாட்டு வலையம் - பிரான்ஸ் சார்பாகவும் பிரான்ஸின் நீதி அமைச்சர் மற்றும் உள்துறை அமைச்சர் ஆகியோரிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 9, 2012 அன்று, பிரான்சில் தமிழ் மக்களின் தலைவரான நடராஜா மதீந்திரன், பரிஸ் 20 ஆம் வட்டாரத்தில் Rue des Pyrénées இல் மோட்டார் சைக்கிளில் வந்த முகமூடி அணிந்த இருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பிரான்சில் தமிழ் மக்களின் பிரதிநிதியாக இருந்த நடராஜா மதீந்திரன் இலங்கை அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தின் கீழே பிரான்ஸில் அரசியல் படுகொலை செய்யப்பட்டார்.

நடராஜா மதீந்திரனின் கொலைக்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை. அவரது கொலைக்கான சந்தேக நபர்களை பிரெஞ்சு பொலிசார் கைது செய்தனர். ஆனால், அவர்கள் சில காலங்களிலேயே விடுதலை செய்யப்பட்டனர். நடராஜா மதீந்திரன் படுகொலை வழக்கை பிரான்ஸ் அரசு எடுத்து புதிய விசாரணையை மீண்டும் தொடங்கவேண்டும்.

நடராஜா மதிந்திரன் பிரான்சில் வாழும் 450,000 ஈழத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர். பிரான்சில் இதுவரை மூன்று தமிழர்கள் இலங்கை அரசால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால், இந்த மூன்று பேரின் கொலைகளுக்கும் நீதி கிடைக்காதது கவலை அளிக்கிறது.

தமிழ் மக்களின் இந்தக் கோரிக்கையை பிரான்ஸ் அரசாங்கமும், பிரான்ஸ் அரசாங்கத்தின் நீதித்துறையும் ஏற்று, நடராஜா மதீந்திரன் படுகொலை தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

பிரான்சில் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு நடத்திய அரசியல் படுகொலைகளுக்கு நீதி பெற்றுத் தருவது பிரான்ஸ் அரசின் கடமை என்பதோடு, பிரான்சில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் தமிழர்களின் பாதுகாப்பையும் பிரான்ஸ் அரசு உறுதி செய்ய வேண்டும், என்று அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (04)

# காட்டு யானைத் தாக்குதலுக்கு இலக்காகிப் பெண் ஒருவர் பலி!

(கே.எ.ஹமீட்)

சம்மாந்துறைப் பிரதேசத்தில் நெய்னாகாடு வம்பியடி எனும் இடத்தில் நேற்று இரவு காட்டு யானை தாக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாகச் சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இறக்காமம் பிரதேசச் செயலகத்திற்கு உட்பட்ட இறக்காமம் 9ஆம் பிரிவைச் சேர்ந்த புஹாரி சரீப் சிபானி (றிபானி) என்ற 43 வயதுடையவரும் 3 பிள்ளைகளின் தாயாருமான ஒருவரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒலுவில் கடலில் நீராடுவதைத் தவிர்ப்போம்! ஜம்இயத்துல் உலமா சபை வேண்டுகோள்

(ஏ.எஸ்.மௌலானா)

ஒலுவில் பிராந்திய கடலில் நீராடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு அகில இலங்கை ஜம்இயத்துல் உலமா சபையின் ஒலுவில் கிளை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதனை வலியுறுத்தி அதன் தலைவர் மௌலவி ஏ.எல். பைஸல், செயலாளர் மௌலவி எம்.எல். பைசால் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அம்பாறை மாவட்டத்தின் ஒலுவில் பிரதேசத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், வெளிச்ச வீடு, ஒலுவில் துறைமுகம் போன்றவை அமைந்திருப்பதால் பல பகுதிகளில் இருந்தும் அனேகமானவர்கள் இவற்றைப் பார்வையிட வருகை தருகின்றனர்.

குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள், க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைகள் எழுதிய பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள் மற்றும் சகபாடிகள் என பலர் வருகைதந்து இம்முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிடுவதுடன் கடலில் நீராடுவதிலும் ஈடுபடுகின்றனர்.

ஆனால், தென்கிழக்குப் பிராந்திய கடற்பரப்பில் ஒலுவில் சற்று ஆழம் கூடிய கடற்பரப்பாக காணப்படுகிறது. இதனைப் பெரும்பாலானோர் அறிந்திருப்பதில்லை.

இந்நிலையில் கடலில் பரிச்சயம் இல்லாத இளையோர்கள் பல சந்தர்ப்பங்களில் இக்கடலில் மூழ்கி மரணத்தைத் தழுவுகின்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்து வருகின்றன.

மரணத்தை எழுதி வைத்தவன் அல்லாஹ். எந்த இடத்தில் மரணத்தை அல்லாஹ் நாடி இருக்கின்றானோ அங்கே அவரை கொண்டு சேர்ப்பான். இருப்பினும் மனிதன் தற்பாதுகாப்பாக நடந்து கொள்வதன் மூலமாக மேற்படி இடர்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமாக இருக்கும்.

இப்பிரதேச கடற்கரையை அண்மித்து வசிப்பவர்களை விட தூர பிரதேசங்களிலிருந்து வருவோரே இக்கடலில் மூழ்கி அதிகம் மரணித்துள்ளனர்.

கடந்த திங்களன்று அட்டாளைச்சேனையைச் சேர்ந்த 10 ஆம் வகுப்பு மாணவர் ஒருவர் பிரத்தியேக வகுப்பு முடிவடைந்த பின்னர் சக மாணவர்களுடன் இக்கடலில் நீராடச் சென்று மரணத்தைத் தழுவி ஜனாசாவாக மீட்கப்பட்டுள்ளார்.

இது போன்ற மனதை உருக்கும் பல சம்பவங்கள் இங்கு தொடர்ச்சியாக இடம்பெறுவது மிகுந்த வேதனையை ஏற்படுத்துகிறது. இவ்வாறான அனர்த்தங்களில் இருந்து எமது இளைய சமூகத்தைப் பாதுகாப்பது அவசியமாகும்.

ஆகையினால், குறைந்த பட்ச நீச்சல் திறமைகூட இல்லாதவர்கள் ஒலுவில் பிராந்தியக் கடலில் நீராடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு அகில இலங்கை ஜம்இயத்துல் உலமா சபையின் ஒலுவில் கிளை பொதுமக்களை வினயமாக வேண்டிக்கொள்கிறது- என்று ஒலுவில் உலமா சபை வலியுறுத்தியுள்ளது.



# பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவிப்பு!

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மொஹமட் உவைஸ், பதவி விலகியுள்ளார்.

நேற்று இது தொடர்பான கடிதத்தை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவிடம் அவர் கையளித்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக வெளிநாடு ஒன்றுக்கான ஆலோசகராகப் பணிபுரியும் ஒருவரை நியமிக்க எரிசக்தி அமைச்சர் தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

JRIDE
BEYOND THE ROAD

# ஜே ரைட்

## ஒன்லைன் ரக்சி அப்

## ONLINE TAXI APP FROM JAFFNA



ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

**யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)**

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!




இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store



+94 21 222 8358

**JRIDE TAXI SERVICE**
**SPEED IT NET**
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.10.2023இல் வெளியிடப்பெற்றது.